**பதவி உயர்வு பணி நிரந்தரம் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளின் மீது வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் மின்வாரிய தலைமையகம் முன்பு.....**

# மாபெரும் முற்றுகை போராட்டம்

| இடம் | நாள் |
|---|---|
| மின்வாரிய தலைமையகம் அண்ணாசாலை, சென்னை | 04.10.2016 காலை 10.30 மணிக்கு |

அன்பார்ந்த தோழர்களே ! அலுவலர்களே ! பொறியாளர்களே !

வணக்கம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அலுவலர்கள், மற்றும் பொறியாளர்களின் கோரிக்கைகளை வாரியமும் அரசும் கண்டும் காணாதது போல் செயல்பட்டுவருகிறது. பலமுறை பேச்சுவார்த்தையை வலுக்கட்டாயமாக நடத்தியும் வாரியம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடிமட்ட பதவிகளில் பணியாற்றும் - ஊழியர்களின் பதவி உயர்வுகளில் தேவையற்ற காலதாமதம் 09.01.2014 ஊதிய உயர்வு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மஸ்தூர் பணியாளர்களை 08.01.2016 அன்றே களஉதவியாளர்களாக பதவி உயர்வு அளித்திருக்க வேண்டும். ஆனால் 8 மாதங்கள் கடந்த பின்பு, நமது மாநாட்டின் முடிவின்படி 04.10.2016 முற்றுகை போராட்டம் நடத்துவோம் என அறிவித்த பின்பு தற்போது பதவி உயர்வு அவசர அவசரமாக வழங்கியுள்ளது. இது நமது போராட்ட அறிவிப்புக்கு கிடைத்த வெற்றி.

ஆனால் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வை முறைப்படுத்துவது சம்மந்தமாக இனியும் ஒப்பந்தம் காண முடியவில்லை. இருகட்ட பேச்சுவார்த்தைக்கு பின்பும் வாரியம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல ஆண்டுகளாக ஒரே பதவியில் பணியாற்றும் களப்பிரிவு தொழிலாளர்கள் அடுத்த கட்ட பதவி உயர்வுக்கு ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது கோபம் நியாயம் தானே?

933 கணக்கீட்டாளர்களுக்கு கணக்கீட்டாய்வாளராக பதவி உயர்வு வழங்க தேவையற்ற காலதாமதத்தை வாரியமே செய்கிறது.

பகுதிநேர ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். தூய்மையை கடைபிடிக்க நாடு முழுவதும் பிரச்சாரம் நடைபெறும் பொழுது அலுவலகத்தில் தூய்மையை கடைபிடிக்காமல் இருப்பது நியாயமா? அலுவலகத்தில் கழிப்பிடம் புடைநாற்றம் எடுத்தால் ஊழியர்களின் நலன் பாதிக்கப்படும் என்பதில் வாரியத்திற்கு அக்கறையில்லையா?

பதவி உயர்வில் வட்ட ஒதுக்கீடு மற்றும் ஊர்மாற்றல் போன்றவற்றில் வாரிய விதிமுறைகளை கடைப்பிடிக்காமல் ஆட்சியாளர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும்விதமாக உள்ள அரசியல் தலையீட்டை கண்டித்தும்.....

தொழிலாளர்களின் உள்ளக்குமுறலை புரியாத வாரியத்தலைமைக்கு, அவர்களுக்கு புரிகின்ற மொழியில் புரியவைக்க! **வாரியத் தலைமையகத்தை முற்றுகையிடுவோம்!**

இவண்

CITU

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

. . . . . . . . . . . . . . . . . . . . . கிளை